குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி..எண்.216/2018

2021 ம் ஆண்டு ஆகஸ்டு 26-ம் நாள் வியாழக்கிழமை அரசு/புகார்தாரர்/எதிரி தரப்பு சாட்சியாகிய 2-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.கலைச்செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திருமதி. பழனியம்மாள் வயது : 60

க/பெ : பழனி தொழில் :

ஊர் : சமயம் :

வட்டம் : ஜாதி :

மாவட்டம் :

முதல் விசாரணை.

நான் எல்லாபூரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் தடவழி சம்மந்தமாக பிரச்சினை உள்ளது. சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் பகல் 3.00 அளவில் நானும், எனது கணவரும், எனது மகனும், பேரனும் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகளில் கார்த்திக்ராஜா, நாராயணன் ஆகியோர் கைகளால் எங்களை குத்தினார்கள். நாங்கள் அதில் மயங்கி விட்டோம். எனது பேரனும், சின்ன மகனும் எங்களை சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

எல்லாபூரில் இருந்து முத்துநாய்க்கன்பட்டி போகும் ரோட்டிற்கு மேற்கு பகுதியில் என்னுடைய வீடு மற்றும் காடு அமைந்துள்ளது. என் நிலத்திற்கு தெற்கு பகுதியில் லட்சுமண முதலியார் இடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். என் நிலத்திற்கும் லட்சுமண முதலியார் நிலத்திற்கும் இடையே ஒரு இட்டேரி உள்ளது என்றால் சரிதான். அந்த இட்டேரியின் வழியாக தான் எதிரிகளின் நிலத்திற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். எங்களை அடித்ததாக கூறப்படும் கல்லை போலீசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த போது நான் வீட்டில் இருந்தேன். சம்பவம் நடந்ததில் இருந்து 1/2 மணி நேரத்தில் என் மகன் பேரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். நான் முதலில் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதி பெற்றேன். வேறு எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை. போலீசார் விசாரணை செய்து என்னிடம் கைரேகை பெற்றார்கள். லட்சமண முதலியார் இடம் விற்பதாக விற்பணைக்கு பேசி வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த நிலத்தை வாங்குவதற்காக எனக்கும் எதிரிகளுக்கும் இடையே போட்டி நிலவி வருகிறது என்றாலும், எனவே தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் கூறியுள்ளவாறு எந்த குற்ற சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், யாரும் எங்களை கல்லால் அடிக்கவில்லை என்றாலும், கெட்டவார்த்தையால் திட்டவில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஓம்./-பழனியம்மாள்

ஓம்./- M . A . சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் (FAC),
ஓமலூர்.